# நற்செய்தி கதைப் புத்தகம்

## ஆறு



இது என்னுடைய நற்செய்தி கதைப் புத்தகம் ஆறு

என் பெயர்

நான் என்னுடைய நற்செய்தி கதைப் புத்தகம் ஆறை வாசிக்க முடியும்

இக்கதைகள் சிருஷ்டிகரான தேவனுடைய
வேத புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

இக்கதைப் புத்தகத்தின் படங்களை வரைந்தவர்கள்
இந்தியாவின் ஆதிவாசிக் குழந்தைகள்.
நற்செய்தி கதைப் புத்தகம் ஆறு. கருத்து உரிமை 2013
இந்தியாவில் அச்சிடப்பட்டது. மேலும் விபரங்களுக்கு:
WBTC India, P.O. Box 8478, Bangalore 560084. info@wbtcindia.com



இயேசு சுகமாக்குகிறார் .......................................... 2-15
நான் விடுவிக்கப்பட்டுள்ளேன்.................................... 16-21
இயேசு விடுவிக்கிறார்.......................................... 22-34
இயேசு வாழ்கிறார் ............................................... 36-40

# இயேசு சுகமாக்குகிறார்

மற்றொரு நாள், வேறு நேரம், வேறு இடம்.

ஒரு சிறுமியை என்னால் பார்க்க முடிகிறது.

அச்சிறுமிக்கு வயது பனிரெண்டு.

அச்சிறுமி மிக மிக வியாதிப்பட்டிருக்கிறாள்.

அச்சிறுமி சாகப்போகிறாள்!







அச்சிறுமிக்கு ஒரு தகப்பன் உண்டு.

அவன் பெயர் யவீரு.

யவீரு ஊருக்குள் செல்வதை என்னால் பார்க்க முடிகிறது.

சீக்கிரம்...சீக்கிரம்...சீக்கிரம்...உம் சிறிய மகள் சாகப்போகிறாள்!

யவீரு இயேசுவின் பாதங்களில் விழுவதை என்னால் பார்க்க முடிகிறது.

யவீரு இயேசுவிடம் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது,

‘தயவாக என் வீட்டிற்கு வாருங்கள்.

என் சிறிய மகள் சாகப்போகிறாள்.

அவளைத் தொடும். அவள் நலமாகிவிடுவாள்.

அவளைத் தொடும்.
அவள் வாழ்வாள்.’








இயேசுவும், யவீருவும் யவீருவின் வீட்டிற்குள் செல்வதை என்னால் பார்க்க முடிகிறது.

சிறுமியே காத்திரு, சிருஷ்டிகரான தேவன் வருகிறார்...

ஒரு பெண்ணை இப்போது
என்னால் பார்க்க முடிகிறது.

அவள் மிகவும் வியாதிப்பட்டுள்ளாள்
அவள் புறம்பாக்கப்பட்டவள்.

மிகவும் வியாதிப்பட்ட அப்பெண்
தனக்குள் சொல்வதை என்னால்
கேட்க முடிகிறது,

‘நான் இயேசுவைத் தொட்டால்,
நலமாகிவிடுவேன்.’







அப்போது அது நடந்தது…

மிகவும் வியாதிப்பட்ட அப்பெண்,
இயேசுவைத் தொட்டாள்!

இயேசு நிற்பதை என்னால்
பார்க்க முடிகிறது.

இயேசு சொல்வதை என்னால் கேட்க
முடிகிறது, ‘என்னைத் தொட்டது யார்?’







அநேக மக்கள் கவனிக்கிறார்கள்…
கவனிக்கிறார்கள்…கவனிக்கிறார்கள்…

மிகவும் வியாதிப்பட்ட பெண்
பேசுவதை, என்னால்
கேட்க முடிகிறது,

‘இயேசுவின் ஒரு தொடுதலால்
நான் நலமாகிவிட்டேன்!’







சிறுமியே காத்திரு, சிருஷ்டிகரான
தேவன் வருகிறார்…

அப்போது அது நடந்தது...







ஒருவன் யவீருவிடம் சொல்வதை
என்னால் கேட்க முடிகிறது,
'உம் சிறுமி இறந்துவிட்டாள்.'

இயேசு யவீருவிடம் சொல்வதை
என்னால் கேட்க முடிகிறது,

'வருத்தப்படாதே, நான் இயேசு.

உன் சிறுமி வாழ்கிறாள்!'

இயேசுவும் யவீருவும், யவீருவின்
வீட்டிற்குள் செல்வதை என்னால்
பார்க்க முடிகிறது.

இறந்துவிட்ட சிறுமியிடம்
இயேசு சொல்வதை என்னால்
கேட்க முடிகிறது,

'சிறுமியே எழுந்திரு!'

சிறுமி எழும்புவதை என்னால்
பார்க்க முடிகிறது!

அச்சிறுமி வாழ்கிறாள்!







இயேசுவே என்றென்றும்
சதாகாலமும் உள்ள வாழ்வு.

இருளைப் பின் தள்ளும் வல்லமை
இயேசுவுக்கு மாத்திரமே உண்டு.

சிருஷ்டிகரான தேவன்
இங்கே இருக்கிறார்!

# நான் விடுவிக்கப்பட்டுள்ளேன்

மற்றொரு நாள், வேறு நேரம்,
வேறு இடம்.

இயேசுவும் அவரைப்
பின்பற்றுபவர்களும் நதியைக்
கடப்பதை என்னால் பார்க்க முடிகிறது.

பன்றிகள் நதியருகில் நிற்பதை
என்னால் பார்க்க முடிகிறது.







அங்கு ஒரு மனிதனை என்னால்
பார்க்க முடிகிறது.

அம்மனிதனில் பல தீய
ஆவிகள் உள்ளன.

அவனில் உள்ள பல தீய
ஆவிகளிடம் இயேசு சொல்வதை
என்னால் கேட்க முடிகிறது,

‘இம்மனிதனிலிருந்து
வெளியேறி நதியருகில் நிற்கும்
பன்றிகளுக்குள் செல்லுங்கள்.’

பல தீய ஆவிகள் அவனிலிருந்து
வெளியேறி நதியருகில் நிற்கும்
பன்றிகளுக்குள் செல்வதை
என்னால் பார்க்க முடிகிறது.

பன்றிகள் நதிக்குள் ஓடுவதை
என்னால் பார்க்க முடிகிறது.

பன்றிகள் இறந்துவிட்டன.







அம்மனிதன் இயேசுவுக்குப்
பாடுவதை என்னால்
கேட்க முடிகிறது.

இயேசு அம்மனிதனிடம் சொல்வதை
என்னால் கேட்க முடிகிறது,

‘போய் எல்லா மக்களிடமும்
சிருஷ்டிகரான தேவன் உனக்குச்
செய்ததைச் சொல்.’

அம்மனிதன் எல்லா மக்களிடமும்
சொல்வதை என்னால் கேட்க முடிகிறது,

‘இயேசு தீய ஆவிகளை என்னிலிருந்து
வெளியேறச் சொன்னார்.

தீய ஆவிகள் என்னிலிருந்து
வெளியேறின.

இயேசு எனக்கு விடுதலை
தந்திருக்கிறார்.’







இயேசுவே உலகத்தின் ஒளி.

இருளைப் பின் தள்ளும் வல்லமை
இயேசுவுக்கு மாத்திரமே உண்டு.

சிருஷ்டிகரான தேவன்
இங்கே இருக்கிறார்!

# இயேசு விடுவிக்கிறார்

காலம் கடந்தது.

இரவு மிக மிக
இருட்டாயிருக்கிறது.





இயேசு அவரைப் பின்பற்றுவோரிடம்
சொல்வதை என்னால் கேட்க முடிகிறது,

‘நீங்கள் செய்த எல்லா தீய
செயல்களுக்காகவும் எனது உயிரை
இரத்த பலியாக நான் கொடுக்கும்
நேரம் வந்துவிட்டது.

உங்கள் தண்டனையை நான்
ஏற்கிறேன்.

நான் இருளைப் பின் தள்ளுவேன்.

உங்களை என்றென்றுமுள்ள
சதாகாலமும் நான் விடுவிப்பேன்.’

காலம் கடந்தது.

போர் வீரர்கள் இயேசுவை
சிலுவையில் ஆணியடிப்பதை
என்னால் பார்க்க முடிகிறது.





இயேசுவின் இரத்தம் நிலத்தில்
விழுகிறதை என்னால்
பார்க்க முடிகிறது.

இயேசு சிலுவையில் தொங்குவதை
என்னால் பார்க்க முடிகிறது.

இயேசு சொல்வதை என்னால்
கேட்க முடிகிறது,

‘நான் இன்னும் உங்களை
நேசிக்கிறேன்.

நான் உங்களை மீட்பேன்.
நீங்கள் என்னைக் கண்டுகொள்வீர்கள்.

உங்களை நான் மன்னிக்கிறேன்.
என் உயிரை உங்களுக்காகத் தருகிறேன்.’








இயேசு இறந்ததை என்னால்
பார்க்க முடிகிறது.


இந்த நாள் மிக மிக இருண்டுவிட்டது...

இயேசுவைப் பின்பற்றுவோர் அவரது இறந்த உடலைக் கல்லறைக்குக் கொண்டு செல்வதை என்னால் பார்க்க முடிகிறது.

இயேசு அடக்கம் பண்ணப்பட்டார்.







காலம் கடந்தது.

இயேசுவின் கல்லறை காலியாக
இருப்பதை என்னால் பார்க்க முடிகிறது!

இயேசுவின் உடல் எங்கே?





நல்ல ஆவி இயேசுவைப்
பின்பற்றுவோரிடம் சொல்வதை
என்னால் கேட்க முடிகிறது,

‘இயேசு என்றென்றுமுள்ள
சதாகாலமும் வாழ்கிறார்!’

என்னால் இயேசுவைப் பார்க்க
முடிகிறது. அவர் வாழ்கிறார்!






இயேசு அவரைப் பின்பற்றுவோரிடம்
சொல்வதை என்னால் கேட்க முடிகிறது,

‘எங்குமுள்ள எல்லா மக்களிடமும்,
எல்லா குலத்தவரிடமும் போய்
நற்செய்தியைச் சொல்லுங்கள்!

நான் உங்களை நேசிக்கிறேன்.
நான் இறந்தேன், ஆனாலும்
உயிரோடிருக்கிறேன், உங்களை
என்றென்றுமுள்ள சதாகாலமும்
விடுவிப்பேன்.’

இயேசு வானத்தில் மேலே...
மேலே...மேலே...செல்வதை
என்னால் பார்க்க முடிகிறது.





# இயேசு வாழ்கிறார்

அநேக வருடங்கள் கழிந்தன.
ஒரு மனுஷனை என்னால்
பார்க்க முடிகிறது.
அவன் பெயர் யோவான்.

யோவான் சொல்வதை என்னால்
கேட்க முடிகிறது,

‘இயேசுவை வானத்தில் என்னால்
பார்க்க முடிகிறது. அவரது கண்கள்
நெருப்பைப் போல் இருக்கின்றன!’







இயேசு வெண் குதிரையில்
வருவதை என்னால்
பார்க்க முடிகிறது.

அவர் பெயர் தேவ வார்த்தை.

இயேசுவின் ஆடையில்
இவ்வார்த்தைகளை என்னால்
பார்க்க முடிகிறது.

ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர்!

எல்லா குலத்து மக்களும் இயேசுவுக்குப் பாடுவதை என்னால் பார்க்க முடிகிறது.

எல்லா ஆவிகளும் இயேசுவுக்குப் பாடுவதை என்னால் பார்க்க முடிகிறது.

அனைத்தும் இயேசுவுக்குப் பாடுவதை என்னால் பார்க்க முடிகிறது.







சிருஷ்டிகரான தேவன் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது,

‘என் மக்கள் என்றென்றுமுள்ள சதாகாலமும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மரணம் இல்லை. கண்ணீர் இல்லை.

துக்கம் இல்லை. வேதனை இல்லை.

நான் எல்லாவற்றையும் புதிதாக்கிவிட்டேன்.’

இயேசு சொல்வதை என்னால்
கேட்க முடிகிறது,

‘இதோ நான் மீண்டும் சீக்கிரம் வருவேன்.

நான் என்றென்றும் இருப்பவர்.
நான் இயேசு.

நான் உங்களை நேசிக்கிறேன்.

நான் உங்களை என்றென்றுமுள்ள
சதாகாலத்திற்கும் விடுவித்திருக்கிறேன்.’

